# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு ஆர். வெங்கடாசலம்,**
**மேயர்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி,**
**கோயம்புத்தூர்- 641 001**

**பெறுநர்**

**மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,**
**ஆளுங்கட்சி / எதிர்கட்சித் தலைவர்கள்,**
**வார்டு குழுத் தலைவர்கள்,**
**நியமனக்குழு உறுப்பினர்,**
**நிலைக்குழு தலைவர்கள் மற்றும்**
**அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி.**

**அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி.**

**சட்டமன்ற உறுப்பினர்கள்,**
**(கோவை கிழக்கு, கோவை மேற்கு,**
**சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்**
**மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),**

**பாராளுமன்ற உறுப்பினர்கள்,**
**(கோவை மற்றும் பொள்ளாச்சி**
**பாராளுமன்றத் தொகுதிகள்)**

**ந.க.எண் : 9076 / 2009 / எம்சி. 8 நாள் : 8.09.09**

**அய்யா /அம்மா,**

**பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.**

-----------

**கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 11.09.2009 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**இணைப்பு : 1**

**/ உண்மைநகல் / உத்திரவின்படி/**

**மாமன்ற செயலாளர்**

**நகல் :**

**துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி**
**ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி**

## மாமன்ற அவசரக் கூட்டம்

## செப்டம்பர் 2009

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | வருவாய் பிரிவு - காலியிட வரி விதிப்பு செய்தல் - அரசாணை வெளியிடப்பட்டது – பதிவு செய்தல் - தொடர்பாக. ( இணைப்பு- 1) |
| 2 | Jnnurm – பாதாள சாக்கடைத் திட்டம் - சிப்பம் I பணி – ஒப்பந்த விலைப்புள்ளி ஏற்றல் - மாமன்றம் பதிவு செய்தல்- தொடர்பாக. |
| 3 | Jnnurm – பாதாள சாக்கடைத் திட்டம் - சிப்பம் II பணி –ஒப்பந்த விலைப்புள்ளி நிராகரித்தல் - மாமன்றம் ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக. |
| 4 | Jnnurm – பாதாள சாக்கடைத் திட்டம் - சிப்பம் III பணி –ஒப்பந்த விலைப்புள்ளி ஏற்றல் - மாமன்றம் பதிவு செய்தல்- தொடர்பாக. |
| 5 | பொறியியல் பிரிவு - 10 அபிவிருத்திப் பணிகள் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 6 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் -கவுண்டம்பாளையம் பழைய குப்பைக் கிடங்கு வளாகம் - மேல்நிலைப் பள்ளி கட்டிடம் கட்டுதல் - நகராட்சி நிர்வாக இயக்குனரகத்திற்கு பரிந்துரை செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 7 | மேற்கு மண்டலம் - வார்டு எண் 53 – செல்வபுரம் ஹவுசிங் யூனிட் - சமுதாயக் கூடம் - வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 8 | மேற்கு மண்டலம் - காலியாக உள்ள கடைகள் - உச்சகேள்விதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்தல்- மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 9 | மேற்கு மண்டலம் - வார்டு எண் 51 – தடாகம் ரோடு, வாழைக்காய் மண்டி - சமுதாயக் கூடம் - வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 10 | கல்விப் பிரிவு - 1 முதல் 5 –ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவச கேன்வாஷ் ஷு மற்றும் சாக்ஸ் வழங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 11 | கிழக்கு மண்டலம் - புலியகுளம் மாநகராட்சி திருமண மண்டபம் - சர்வே ஆப் இந்தியா அலுவலகத்திற்கு உரிமக்காலம் நீடித்து வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 12 | நகரமைப்புப் பிரிவு - பயணிகள் நிழற்குடை அமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 13 | நகரமைப்புப் பிரிவு - வடக்கு மண்டலம் -எல்லைத் தோட்டம் சாலைக்கும் அவினாசி சாலைக்கும் இணைப்புச் சாலை அமைத்தல் - மாமன்றம் முடிவு செய்தல் -தொடர்பாக |
| 14 | நகரமைப்புப் பிரிவு - 60’ அகல திட்டச் சாலைப் பகுதிகளை அணுகு சாலையாக கொண்டு ஒட்டியுள்ள பகுதிகள் - பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக பிரகடனம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 15 | நகரமைப்புப் பிரிவு - தெற்கு மண்டலம் - உக்கடம் - நகரளவு எண்கள் 57, 58/1 உள்ளிட்டவை – Jnnurm மற்றும் BSUP திட்டத்தின்கீழ் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |

இணைப்பு -1

நன்றியுரை

அ) **திருக்குறள்**

**சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க**
**சொல்லிற் பயனிலாச் சொல்.**

**(குறள் -200)**

**விளக்கம்**

**பயனளிக்காத சொற்களை விடுத்து மனத்தில் பதிந்து பயனளிக்கக் கூடிய சொற்களையே கூற வேண்டும்.**

**திருவள்ளுவர்.**

---

**ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி**

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

## சிறப்புத் தீர்மானம்

பொருள் - காலியிடங்களுக்கு சொத்து வரியினை மிகமிகக் குறைத்து மக்களுக்கு பெரும்பயன் அளிக்க ஆணை பிறப்பித்த மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்களுக்கும், தமிழக அரசிற்கும் நன்றி தெரிவிக்கும் தீர்மானம்.

தமிழகத்தில் காலியாக இருக்கும் இடங்களுக்கு இதுகாறும் கூடுதலாகவும், பல மாதிரியான வரிகளும் விதிக்கப்பட்டு வந்தது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டார்கள். தமிழகம் முழுவதும் சீராக ஒரே மாதிரி வரிவிதிப்பில் குறைபாடு இருந்தது. இதனை சரிசெய்து தமிழக மக்கள் நீண்ட காலமாக கோரிவந்தபடி காலியிட வரியினை குறைத்து மாண்புமிகு தமிழக உள்ளாட்சித் துறை மற்றும் துணை முதல்வருமான போற்றுதலுக்குரிய தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் 20.8.2009ம் தேதி தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் மிகமிகக் குறைவாக காலியிட வரி ஆணையினை பிறப்பித்துள்ள தமிழக அரசிற்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழக மாமன்ற உறுப்பினர்கள் சார்பாக நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றுகிறோம்.

## சிறப்புத் தீர்மானம் எண் 1

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 1

பொருள்- காலியிடங்களுக்கு சொத்துவரி நிர்ணயம் செய்தல்- கோயம்புத்தூர் மாநகராட்சி-தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (காலியிடங்களுக்கு சொத்துவரி விதிப்பு) விதிகள் 2009-காலியிட வரி வீதம் (Rate) நிர்ணயம் செய்தல்- மாமன்றத்தின் ஒப்புதல் கோருதல் - தொடர்பாக.

பார்வை-

1. அரசு ஆணை எண்.151 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 20.08.2009.
2. தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (காலியிடங்களுக்கு சொத்துவரி விதிப்பு) விதிகள் ‘2009.
3. சுற்றறிக்கை ந.க.எண். 41802/2009/ஆர்.1 நாள் 07.09.2009 இயக்குநர் நகராட்சி நிர்வாகம், சென்னை.
4. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.8 நாள் 07.09.2009.

-----------

பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் காலியிடங்களுக்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதம் நிலத்தின் முதலீட்டு மதிப்பின் (Capital Value) அடிப்படையில் நிர்ணயம் செய்யாமல் சதுரடி (Square Feet) அடிப்படையில் நிர்ணயம் செய்யவும், அவ்வாறு விதிக்கப்படும் காலியிடங்களுக்கான சொத்துவரியின் குறைந்தபட்ச மற்றும் உயர்ந்தபட்ச வீதத்தை அரசு நிர்ணயம் செய்தும், அரசு ஆணை எண்.151, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 20.08.2009 மற்றும் தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (காலியிடங்களுக்கு சொத்துவரி விதிப்பு) விதிகள் ‘2009-ல் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இவ்விதிகள் 01.09.2009 முதல் அமுலுக்கு வருகிறது.

தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (காலியிடங்களுக்கு சொத்துவரி விதிப்பு) விதிகள் 2009-ன் விதி (3)ல் மாநகராட்சிகள் நிர்ணயம் செய்ய வேண்டிய குறைந்தபட்ச மற்றும் உயர்ந்தபட்ச காலியிடங்களுக்கான சொத்துவரி வீதம் கீழ்க்கண்டவாறு:

| காலியிட அமைவிடம் | | சதுரடிக்கு நிர்ணயம் செய்யப்பட வேண்டிய வீதம் | |
|---|---|---|---|
| | | குறைந்தபட்சம் (பைசாவில்) | உயர்ந்தபட்சம் (பைசாவில்) |
| 1. | குடியிருப்பு பகுதிகளில் உள்ள தெருக்கள் **Streets in residential area** | 20 | 40 |
| 2. | பிரதான சாலைகள் மற்றும் பேருந்து போக்குவரத்துச் சாலைகள் (முக்கியமான சாலைகளுக்குச் செல்லும் சாலைகள் நீங்கலாக)**Main roads and bus route roads other than those which lead to arterial road.** | 30 | 50 |
| 3. | முக்கியமான சாலைகள், பிரதான சாலைகள் மற்றும் முக்கிய சாலைகளுக்கு செல்லும் பேருந்து போக்குவரத்து சாலைகள் **Arterial roads, main roads and bus route roads which lead to arterial road.** | 40 | 60 |

கோவை மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை திட்டம், பாதாள சாக்கடைத் திட்டம், பில்லூர் இரண்டாம் குடிநீர்த் திட்டம், நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல் திட்டம் மற்றும் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்களான 24 x 7 குடிநீர்த் திட்டம், மழைநீர் வடிகால் திட்டம், பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான குளங்களை புனரமைத்தல் திட்டம், போக்குவரத்து மேலாண்மைத் திட்டம் முதலிய திட்டப்பணிகளுக்கு மாநகராட்சியின் பங்குத் தொகையான 30% தொகை, மாநகராட்சி நிதியிலிருந்து செலுத்தப்பட வேண்டியுள்ளதால், மாநகராட்சியின் நிதி ஆதாரங்களை வலுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்கள் அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்தபட்ச மற்றும் உயர்ந்தபட்ச வரையறைக்குட்பட்டு காலியிடத்திற்கான சொத்துவரி மதிப்பினை சதுரடிக்கு நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும்.

மாநகராட்சியின் நிதிநிலையைக் கருத்திற் கொண்டும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்ட செயலாக்கத்திற்கு செலுத்த வேண்டிய மாநகராட்சியின் பங்கு நிதி மற்றும் மாநகராட்சியின் வளர்ச்சித் திட்டங்களைக் கருத்திற் கொண்டும், அரசு நிர்ணயம் செய்துள்ள உயர்ந்தபட்ச விகிதத்தில் காலியிட வரி நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 8 நாள் 07.09.2009-ன்படி உயர்ந்தபட்ச விகிதத்தில் நிர்ணயம் செய்ய ஒப்புதல் வழங்கியுள்ளது.

எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தை ஏற்று உயர்ந்தபட்ச விகிதத்தில் காலியிடங்களுக்கான சொத்துவரி நிர்ணயம் செய்யவும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள விதிமுறைகளின்படி காலியிடங்களுக்கான சொத்து வரி விதிப்பினை நிர்ணயம் செய்து வசூலிக்கவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

1. அரசு ஆணை எண்.151 ந.நி.ம.கு.வ.(தேர்தல்) துறை நாள் 20.08.2009 பதிவு செய்யலாம்.

2. நகராட்சி நிர்வாக இயக்குநரக சுற்றறிக்கை ந.க.எண்.41802/2009/ஆர்.1, நாள் 07.09.2009-னை பதிவு செய்து நடைமுறைப்படுத்தலாம்.

3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துறையை ஏற்று உயர்ந்தபட்ச காலியிடங்களுக்கான சொத்துவரியினை நிர்ணயம் செய்யலாம்.

ந.க.எண். 8945/2009 /எம்எ.1

மாநகர மன்ற தீர்மானம் எண் 58 நாள் 11.9.2009

1. அரசு ஆணை எண்.151 ந.நி.ம.கு.வ.(தேர்தல்) துறை நாள் 20.08.2009- ஐப் பதிவு செய்யப்பட்டது.

2. நகராட்சி நிர்வாக இயக்குநரக சுற்றறிக்கை ந.க.எண்.41802/2009/ஆர்.1, நாள் 07.09.2009-ஐப் பதிவு செய்து சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துறையை ஏற்று அரசு நிர்ணயம் செய்துள்ள உயர்ந்தபட்ச விகிதத்தில் காலியிடங்களுக்கான சொத்துவரியினை நிர்ணயம் செய்யவும் 2009-10 இரண்டாம் அரையாண்டு முதல் புதிய விகிதத்தில் காலியிடங்களுக்கான சொத்துவரியினை நிர்ணயம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 2

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 377.13 கோடி மதிப்பீட்டில் கோவை மாநகராட்சியின் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அனுமதி பெறப்பட்டதின் பேரில் திட்டப்பணி ஆறு சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு, அதில் மாநகராட்சியின் நான்கு மண்டலங்கள் – I, II, V மற்றும் VI உள்ளடங்கிய சிப்பம் I பணியான கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள் அமைக்கும் பணிக்கு மூன்றாவது முறையாக தேசிய அளவிலான ஒப்பந்தவிலைப்புள்ளிகள் கடந்த 29.04.2009–ல் கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்கள் கலந்துகொண்டு தொழில் நுட்ப தகுதி (Technical Bid) மற்றும் ஒப்பந்தவிலைப்புள்ளி (Financial Bid) வழங்கியது.

1. **M/s. Subaya Constructions Company Ltd., Chennai**
   (தி/ள். சுப்பையா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கம்பெனி லிட்., சென்னை)
2. **M/s. Simplex Infrastructures Ltd., Kolkata,**
   (தி/ள். சிம்ப்ளக்ஸ் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிட்., கொல்கத்தா)

மேற்படி இரு நிறுவனங் கள் தொழில்நுட்ப தகுதி பெற்றதால், ஒப்பந்த விலைப்புள்ளிகள் (Financial Bid) கடந்த 05.06.2009–ல் திறக்கப்பட்டது. இருநிறுவனங் களில் குறைந்த ஒப்பந்த விலைப்புள்ளி வழங்கிய தி/ள். சுப்பையா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கம்பெனி லிட்., சென்னை. நிறுவனத்திடம் நகராட்சி பொறியியல் நடைமுறை நூல் விதி எண்: 2.8–ன் படி விலை குறைப்பு செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு இந்நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைகுறைப்பு கடிதத்திற்கு பின்னர் ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 20.99 % கூடுதலாக ஒப்புக்கொண்டு வழங்கிய ஒப்பந்த விலைப்புள்ளித் தொகையான ரூ. 69,65,94,205.00/–ஐ ‘‘மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு’’ வின் பரிசீலனைக்கு அனுப்பவும், குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் மாமன்றம் தனது தீர்மான எண். 44, நாள் : 22.06.09–ல் ஒப்புதல் வழங்கியதின் பேரில் மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவிற்கு அனுப்பப்பட்டது.

மேற்படி நிறுவனம் இரண்டாவது முறையாக கடந்த 26.06.09–ம் தேதியிட்ட கடிதத்தில், தனது ஒப்பந்தவிலைப்புள்ளியில் மேலும் 0.01% (சதவீதம்) விலைக்குறைப்பு செய்தும், ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 20.98% (சதவீதம்) கூடுதலான தொகை ரூ. 69,65,24,545.00/– க்கு பணியினை மேற்கொள்ள அளித்த சம்மத கடிதத்தின் விபரமும் மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது.

கடந்த 13.07.09ம் தேதியன்று நடைபெற்ற ‘‘மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு‘‘ கூட்டத்தில் தி/ள். சுப்பையா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கம்பெனி லிட்., சென்னை, நிறுவனத்தின் 26.06.09 தேதியிட்ட இரண்டாவது விலைக்குறைப்பு கடிதத்தின்படி ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 20.98% (சதவீதம்) கூடுதலானதும், இரண்டாவது விலை குறைப்பிற்கு பின்னர் ஒப்பந்த மதிப்பீட்டு தொகையான ரூ. 69,65,24,545.00/–ஐ (ரூபாய் அறுபத்து ஒன்பது கோடியே அறுபத்தைந்து லட்சத்து, இருபத்து நான்கு ஆயிரத்து ஐந்நூற்று நாற்பத்து ஐந்து மட்டும்) ஏற்கலாமென ஒப்புதல் வழங் கி உள்ளது. மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்த விலைப்புள்ளி விபரம் / திறப்பு நாள் | விலை குறைப்பு கடிதம் அளித்த நாள் | (விலை குறைப்பிற்கு பின்னர்) ஒப்பந்தவிலைப் புள்ளிவிபரம் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு (அதிகம்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | தி/ள். சுப்பையா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கம்பெனி லிட்., சென்னை. | ரூ.57,57,23,559.00 | ரூ.69,66,98,710.00 நாள் 05.06.2009 | | | 21.01% |
| | | | | 0.015% ஒப்பந்தவிலை புள்ளிக்கு குறைவு 15.06.2009 | ரூ.69,65,94,205.00 | 20.99% |
| | | | | 0.01% ஒப்பந்தவிலை புள்ளிக்கு குறைவு 26.06.09 | ரூ.69,65,24,545.00 | 20.98% |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

தி/ள். சுப்பையா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கம்பெனி லிட்., சென்னை நிறுவனத்தின் இரண்டாவது விலைகுறைப்பிற்கு பின்னர், ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 20.98% சதவீதம் கூடுதலானதும் ஒப்பந்த மதிப்பு தொகையான ரூ.69,65,24,545.00/—ஐ ''மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு'' ஏற்று பரிந்துரை செய்து உள்ளதால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளியினை ஏற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்: 1684/09 / ஜே.என். 4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 59 நாள் 11.9.2009</u>

மாநகர மன்ற தீர்மானம் எண். 44 நாள் 22.06.09-ன்படி ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவிற்கு அனுப்பி மேற்படி குழுவால் விலைக்குறைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இறுதியாக ஒப்பந்தப் புள்ளித் தொகை ரூ. 69,65,24,545.00 (ரூபாய் அறுபத்து ஒன்பது கோடியே அறுபத்து ஐந்து லட்சத்து இருபத்து நான்கு ஆயிரத்து ஐநூற்று நாற்பத்தைந்து ) என்றவாறு விலைக்குறைப்பு செய்து தந்துள்ள தி/ள். சுப்பையா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கம்பெனி லிட், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை பதிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 3

ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்தவும், தற்போது இயக்கத்திலுள்ள பாதாள சாக்கடை திட்டத்தினை புனரமைக்கவும் ரூ. 377.13 கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறையின் அரசாணை ( 3 டி ) எண் 25 நாள் 24.10.2007—ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

மேற்படி பணிக்கான மதிப்பீடு ஆறு சிப்பங்களாக பிரிக்கப்பட்டன. அதில் சிப்பம் (2) பணியான கீழ் குறிப்பிட்டுள்ள பணி அதன் எதிரில் குறிப்பிட்டுள்ள மதிப்பீடு தொகைக்கு தொழில்நுட்ப அங்கீகாரம் பெறப்பட்டது.

| சிப்பம் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ இலட்சத்தில் | தொழில் நுட்ப அங்கீகார எண் |
|---|---|---|---|
| I I | மண்டலங்கள் – III மற்றும் VII-ல் கழிவு நீர் குழாய்கள் அமைக்கும் பணி. | 5708.00 (திருத்திய மதிப்பீடு தொகை) | 27 / 2008 – 09 |

மேற்கண்ட பணிக்கு 29.04.2009–ல் மூன்றாவது முறையாக தேசிய அளவிலான ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில், நான்கு நிறுவனங்கள் கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கியதன் பேரில். நான்கு நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதி ''மாநில தொழில்நுட்ப வழிகாட்டும் குழு''வின் (Technical Standing Committee) பரிசீலனை பெற்று கடந்த 05.06.2009–ல் ஒப்பந்தவிலைப்புள்ளி திறக்கப்பட்டது. நான்கு நிறுவனங்களில், குறைந்த ஒப்பந்த விலைப்புள்ளி வழங்கிய தி.ள். எஸ்.இ.டபிள்யூ – எஸ்.சி.சி.எல், கன்சார்டியம் (ஜே.வி), ஐதராபாத், என்ற நிறுவனம், மூன்றாவது விலைக்குறைப்பு சம்மத கடிதம் வழங்கிய பின்னரும் ஒப்பந்தவிலைப்புள்ளி ரூ.62,31,70,205.00 என கணக்கிடப்பட்டு மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு 29.96% சதவீதம் கூடுதலாக இருந்ததால் ஒப்பந்த விலைப்புள்ளியினை ''மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு '' வின் பரிசீலனைக்கு அனுப்பவும், குழுவின் முடிவினை ஏற்கவும் மாமன்றம் தனது தீர்மான எண் 45, நாள் 22.06.2009ல் ஒப்புதல் பெறப்பட்டது.

''மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு'' 13.07.09–ல் கூடி மதிப்பீட்டுத் தொகைக்கு கூடுதலாக வரப்பட்ட இந்நிறுவன ஒப்பந்தவிலைப்புள்ளியினை மீண்டும் விலைக் குறைப்பு செய்ய கோர கேட்டுக்கொண்டதற்கிணங்க மீண்டும் விலைக்குறைப்பு செய்திட கோரப்பட்டது. இந்நிறுவனம் இறுதியாக கடந்த 16.07.2009ல் வழங்கிய விலைக்குறைப்பு சம்மத கடிதத்திற்கு பின்னரும், மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு 29.62% சதவீதம் கூடுதலாகவும் ஒப்பந்த விலைப்புள்ளி தொகையான ரூ.62,15,00,000.00 (ரூபாய் அறுபத்திரண்டு கோடியே பதினைந்து இலட்சம் மட்டும்) என கணக்கிடப்பட்டதால் மீண்டும் ''மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு''வின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது.

கடந்த 17.08.09ல் ''மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு'' மீண்டும் கூடி இந்நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளி மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 29.62% சதவீதம் கூடுதலாக உள்ளதாலும், 2009–10ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட விலை விபரப் பட்டியலுக்கும் 26.86% சதவீதம் கூடுதலாக உள்ளதாலும் மதிப்பீட்டினை 2009–10–ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட விலைவிகிதத்திற்கு திருத்தி மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது. இப்பணிக்கு 2009–10ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட விலை விபரப்பட்டியலுக்கு தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு தொகை ரூ.5796.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டியும் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு –</u>

(அ) ஒப்பந்தம் உறுதி செய்யும் குழுவின் பரிந்துரையினை மாமன்றம் பதிவு செய்யலாம்.

(ஆ) மூன்றாம் அழைப்பில் வரப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் இறுதி விலைக்குறைப்பிற்கு பின்னரும் ஒப்பந்தவிலைப்புள்ளி ரூ.62,15,00,000.00 (ரூபாய் அறுபத்திரண்டு கோடியே பதினைந்து இலட்சம் மட்டும்) என கணக்கிடப்பட்டு மதிப்பீடு தொகைக்கு 29.62% சதவீதம் கூடுதலாக வழங்கிய தி.ள். எஸ்.இ.டபிள்யூ – எஸ்.சி.சி.எல், கன்சார்டியம் (ஜே.வி), ஐதராபாத், நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளியினை மாமன்றம் நிராகரிக்கலாம்.

(இ) 2009 – 10ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட விலை விபரப் பட்டியலுக்கு தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு தொகை ரூ.5796.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கி நிர்வாக அனுமதிக்கும் கூடுதலாகும் நிதியினை மாநகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவழிக்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 1468 /09/ஜே.எண்.4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 60 நாள் 11.9.2009</u>

(அ) மாநகர மன்ற தீர்மானம் எண். 45 நாள் 22.06.09-ன்படி ஒப்பந்தப் புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிந்துரை பதிவு செய்யப்பட்டது.

(ஆ) மூன்றாம் அழைப்பில் வரப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் இறுதி விலைக்குறைப்பிற்கு பின்னரும் ஒப்பந்தவிலைப்புள்ளி ரூ.62,15,00,000.00 (ரூபாய் அறுபத்திரண்டு கோடியே பதினைந்து இலட்சம் மட்டும்) என கணக்கிடப்பட்டு மதிப்பீடு தொகைக்கு 29.62% சதவீதம் கூடுதலாக வழங்கிய தி.ள். எஸ்.இ.டபிள்யூ –எஸ்.சி.சி.எல், கன்சார்டியம் (ஜே.வி), ஐதராபாத், நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளியினை மாமன்றம் நிராகரிக்க தீர்மானிக்கப்பட்டது.

(இ) 2009 – 10ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட விலை விபரப் பட்டியலுக்கு தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு தொகை ரூ.5796.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கி நிர்வாக அனுமதிக்கும் கூடுதலாகும் நிதியினை மாநகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவழிக்க மாமன்றம் ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 4

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 377.13 கோடி மதிப்பீட்டில் கோவை மாநகராட்சியின் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அனுமதி பெறப்பட்டதின் பேரில் திட்டப்பணி ஆறு சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு, அதில் மாநகராட்சியின் மண்டலங்கள். IV மற்றும் VIII உள்ளடங்கிய சிப்பம் III பணியான கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள் அமைக்கும் பணிக்கு மூன்றாவது முறையாக தேசிய அளவிலான ஒப்பந்தவிலைப்புள்ளிகள் கடந்த 29.04.2009–ல் கோரப்பட்டதில் கீழ்கண்ட நான்கு நிறுவனங்கள் கலந்துகொண்டு தொழில் நுட்ப தகுதி (Technical Bid) மற்றும் ஒப்பந்தவிலைப்புள்ளி (Financial Bid) வழங்கியது.

1. M/s. SEW-SCCL, Consordium (JV), Hyderabad,
(தி/ள். எஸ்.இ.டபிள்யூ எஸ்.சி.சி.எல், கன்சார்டியம் (ஜே.வி), ஹைதராபாத்)
2. M/s. IVRCL Infrastructures & Projects, Ltd., Chennai.
(தி/ள். ஐ.வி.ஆர்.சி.எல் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் & புராஜக்ட்ஸ் லிட்., சென்னை)
3. M/s. TVRCPL – HNBEPL (JV), Hyderabad
(தி/ள். டி.வி.ஆர்.சி.பி.எல்–ஹெச்.என்.பி.இ.பி.எல். (ஜே.வி.), ஹைதராபாத்)
4. M/s. Simlex Infrastructures Ltd., Kolkata.
(தி/ள். சிம்ப்ளக்ஸ் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிட்., கொல்கத்தா.)

மேற்படி நான்கு நிறுவனங்கள் தொழில்நுட்ப தகுதி பெற்றதால், ஒப்பந்த விலைப்புள்ளிகள் (Financial Bid) கடந்த 05.06.2009–ல் திறக்கப்பட்டது. நான்கு நிறுவனங்களில் குறைந்த ஒப்பந்த விலைப்புள்ளி வழங்கிய தி/ள். டி.வி.ஆர்.சி.பி.எல்–ஹெச்.என்.பி.இ.பி.எல். (ஜே.வி). ஹைதராபாத். நிறுவனத்திடம் நகராட்சி பொறியியல் நடைமுறை நூல் விதி எண்: 2.8–ன் படி விலை குறைப்பு செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு இந்நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைகுறைப்பு கடிதத்திற்கு பின்னர் ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 28.01% கூடுதலாக ஒப்புக்கொண்டு வழங்கிய ஒப்பந்த விலைப்புள்ளித் தொகையான ரூ. 125,00,33,149/– ஐ "மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு" வின் பரிசீலனைக்கு அனுப்பவும், குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் மாமன்றம் தனது தீர்மான எண் 46 நாள் 22.06.09 ல் ஒப்புதல் வழங்கியதின் பேரில் மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவிற்கு அனுப்பப்பட்டது.

மேற்படி நிறுவனம் மூன்றாவது முறையாக கடந்த 02.07.09–ம் தேதியிட்ட கடிதத்தில், தனது ஒப்பந்தவிலைப்புள்ளியில் மேலும் 0.10% (சதவீதம்) விலைக்குறைப்பு செய்தும், ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 27.88% (சதவீதம்) கூடுதலான தொகையான ரூ. 124,87,83,116/– க்கு பணியினை மேற்கொள்ள அளித்த சம்மத கடிதத்தின் விபரமும் மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது.

கடந்த 13.07.09ம் தேதியன்று நடைபெற்ற "மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு" கூட்டத்தில் தி/ள். டி.வி.ஆர்.சி.பி.எல்–ஹெச்.என்.பி.இ.பி.எல். (ஜே.வி). ஹைதராபாத், நிறுவனத்தின் 13.07.09 தேதியிட்ட ஐந்தாவது விலைக்குறைப்பு கடிதத்தின் படி ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 24.99% (சதவீதம்) கூடுதலானதும், ஐந்தாவது விலை குறைப்பிற்கு பின்னர் ஒப்பந்த மதிப்பீட்டு தொகையான ரூ. 122,05,46,256/–ஐ (ரூபாய் நூற்றிஇருபத்து இரண்டு கோடியே ஐந்து லட்சத்து, நாற்பத்து ஆறாயிரத்து இருநூற்று ஐம்பத்து ஆறு) ஐ ஏற்கலாமென ஒப்புதல் வழங்கி உள்ளது. மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்த விலைப்புள்ளி விபரம் / திறப்பு நாள் | விலை குறைப்பு கடித நாள் | ஒப்பந்தவிலைப் புள்ளிவிபரம் (விலைக்குறைப்பிற்கு பின்னர்) | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு (அதிகம்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | தி/ள். டி.வி.ஆர்.சி.பி. எல். – ஹெச். என்.பி.இ.பிஎல் (ஜே.வி.), ஹைதராபாத் | ரூ.97,65,22,965 /- | ரூ.125,97,15,955/- நாள் 05.06.2009 | | | 29.00% |
| | | | | ஒப்பந்தவிலைப் புள்ளிக்கு (0.5% குறைப்பு) 06.06.09 | ரூ.125,34,17,376/- | 28.36% |
| | | | | முதல் விலைகுறைப்பு தொகைக்கு (0.27% குறைவு) 09.06.09 | ரூ.125,00,33,149/- | 28.01% |
| | | | | இரண்டாம் விலைகுறைப்பு தொகைக்கு (0.10% குறைவு) 02.07.09 | ரூ.124,87,83,116/- | 27.88% |
| | | | | மூன்றாம் விலைகுறைப்பு தொகைக்கு (0.50% குறைவு) 13.07.09 | ரூ.124,25,39,200/- | 27.24% |
| | | | | நான்காம் விலைகுறைப்பு தொகைக்கு (1.77% குறைவு) 13.07.09 | ரூ.122,05,46,256/- | 24.99% |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

தி/ள். டி.வி.ஆர்.சி.பி.எல்–ஹெச்.என்.பி.இ.பி.எல். (ஜே.வி). ஹைதராபாத், நிறுவனத்தின் ஐந்தாவது விலைகுறைப்பிற்கு பின்னர், ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 24.99% சதவீதம் கூடுதலானதும் ஒப்பந்த மதிப்பு தொகையான ரூ. 122,05,46,256/–ஐ ''மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு'' ஏற்று பரிந்துரை செய்து உள்ளதால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளியினை ஏற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்: 1469/09 / ஜே.என். 4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 61 நாள் 11.9.2009</u>

மாநகர மன்ற தீர்மானம் எண். 46 நாள் 22.06.09-ன்படி ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவிற்கு அனுப்பி மேற்படி குழுவின் விலைக்குறைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இறுதியாக ஒப்பந்தப் புள்ளித் தொகை ரூ. 122,05,46,256.00 (நூற்று இருபத்து இரண்டு கோடியே ஐந்து லட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து இருநூற்றி ஐம்பத்து ஆறு) என்றவாறு விலைக்குறைப்பு செய்து தந்துள்ள தி/ள். டி.வி.ஆர்.சி.பி.எல் - ஹெச்.என்.பி.இ.பி.எல். (ஜே.வி), ஹைதராபாத், நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை பதிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 5

கோவை மாநகராட்சி பகுதிகளில் அரசு இடைநிரப்பு நிதியின்கீழ் (Gap Filling Fund) ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 08-07-2009 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலைக் குறைவுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6118 / 09 / எம்.டி.2 | வார்டு எண். 3- வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட பயனீர் மில் ரோடு பகுதியில் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் கட்டுதல் | 20.00 | 30.06.09 முதல் அழைப்பு | திரு. ஆர். தங்கவேலு | 9.45 அதிகம் | 4.92 அதிகம் |
| 2 | 7650 / 09 / எம்.டி.2 | வார்டு எண். 7 மற்றும் 8 - கிழக்கு மண்டல அலுவலக பகுதியில் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் கட்டுதல் | 20.00 | 30.06.09 முதல் அழைப்பு | திரு. ஆர். தங்கவேலு | 9.45 அதிகம் | 4.92 அதிகம் |
| 3 | 7652 / 09 / எம்.டி.2 | வார்டு எண். 16- கிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட PSGV நகர் சாலைப் பகுதியில் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் கட்டுதல் | 20.00 | 30.06.09 முதல் அழைப்பு | தி/ள் என்.பி.கே. அசோசியட்ஸ் | 12.89 அதிகம் | 4.98 அதிகம் |
| 4 | 6120 / 09 / எம்.டி.2 | வார்டு எண். 17- வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட ஆவாரம்பாளையம் பகுதியில் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் கட்டுதல் | 20.00 | 30.06.09 முதல் அழைப்பு | திரு. வானமாமலை | 16.32 அதிகம் | 4.98 அதிகம் |
| 5 | 7651 / 09 / எம்.டி.2 | வார்டு எண். 21 மற்றும் 22 - கிழக்கு மண்டல பகுதியில் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் கட்டுதல் | 20.00 | 30.06.09 முதல் அழைப்பு | திருமதி. வி. பாக்யம் | 5.25 அதிகம் | 4.97 அதிகம் |
| 6 | 5661 / 09 / எம்.டி.4 | வார்டு எண். 36- தெற்கு மண்டலத்திற்குட்பட்ட கிருஷ்ணசாமி ரோடு பகுதியில் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் கட்டுதல் | 20.00 | 30.06.09 முதல் அழைப்பு | தி/ள் என்.பி.கே. அசோசியட்ஸ் | 12.89 அதிகம் | 4.98 அதிகம் |
| 7 | 5659 / 09 / எம்.டி.4 | வார்டு எண். 41,42 மற்றும் 43- தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட தர்மராஜர் கோவில் வீதி பகுதியில் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் கட்டுதல் | 20.00 | 30.06.09 முதல் அழைப்பு | திரு. எ. வெங்கடாசலம் | 13.62 அதிகம் | 4.99 அதிகம் |
| 8 | 5612 / 09 / எம்.டி.4 | வார்டு எண்.62,63 மற்றும் 64 -மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட கவுண்டம் பாளையம் பகுதியில் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் கட்டுதல் | 20.00 | 30.06.09 முதல் அழைப்பு | தி/ள் சபரி எலெக்ட்ரிக்கல்ஸ் | 7.30 அதிகம் | 4.91 அதிகம் |
| 9 | 6117 / 09 / எம்.டி.2 | வார்டு எண். 69 மற்றும் 70- வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாட்டு தொழுவ வளாகப் பகுதியில் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் கட்டுதல் | 20.00 | 30.06.09 முதல் அழைப்பு | திரு. ஆர். செல்வராஜ் | 8.52 அதிகம் | 4.82 அதிகம் |
| 10 | 8714 / 09 / எம்.டி.2 | வார்டு எண். 24- கிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட பகுதியில் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் கட்டுதல் | 20.00 | 30.06.09 முதல் அழைப்பு | திரு.எஸ். முத்துராஜா | 7.09 அதிகம் | 4.98 அதிகம் |

மேற்படி பணிகள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் அரசு இடை நிரப்பு நிதியின்கீழ் (Gap Filling Fund) வருவதாலும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியுள்ளதாலும் இப்பணிகள் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் இப்பணிகளை செய்வதற்கு அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.6118 / 09 / எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 62 நாள் 11.9.2009**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. பிரச்சனைக்குரிய பகுதிகளில் சுகாதார ஆய்வாளர் அலுவலக அமைவிடம் குறித்து சம்பந்தப்பட்ட மாமன்ற உறுப்பினர்களுடன் கூடி முடிவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 6

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் பொறியியல் பிரிவு எண் 5 குப்பக்கோணாம் புதூருக்கென, கவுண்டம் பாளையம் பழைய குப்பைக் கிடங்கு வளாகத்தில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் மேல்நிலைப் பள்ளி கட்டுதல் பணிக்கென ரூ.2,30,00,000/-க்கு (ரூ. இரண்டு கோடியே முப்பது லட்சம்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டு உள்ளது.

மேலும், ஏற்கனவே குப்பக்கோணாம் புதூரில் இயங்கி வரும் மாநகராட்சி பள்ளியில் போதிய வகுப்பறை வசதி இல்லாமலும், ஆய்வுக் கூடம் மற்றும் விளையாட்டு மைதான வசதி இல்லாமலும் உள்ளது.

மேற்படி பணிக்கு 2009-2010 ம் ஆண்டு மாநகராட்சி வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி பணியினை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறவும், நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு பரிந்துரை செய்ய வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக் குறிப்பு - ரூபாய் 2.30 கோடி செலவில் நவீன முறையில் வகுப்பறைகள் கட்டவும் மாநகராட்சி நிதியில் செய்யவும், அனுமதிக்கலாம். மேலும், நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்க அனுமதிக்கலாம்.

ந.க.எண். 9247/09/MD4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 63 நாள் 11.9.2009**

அலுவலக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 7

பொருள் - கோவை மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வார்டு எண். 53 – செல்வபுரம் வடக்கு ஹவுசிங் யூனிட் பகுதியில் புதியதாக சமுதாயக்கூடம் கட்டப்பட்டது –பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்துதல் - தொடர்பாக.

--------------

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண். 53 செல்வபுரம் வடக்கு ஹவுசிங் யூனிட் பகுதியில் புதியதாக சமுதாயக் கூடம் தரைத்தளம் 2166 ச.அடி மற்றும் முதல் தளம் 1927 ச.அடி அளவுள்ள கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தும் பொருட்டு கட்டிடத்திற்கு தற்போதைய வழிகாட்டி மதிப்பின்படி, தின வாடகை ரூ.1500 பொறியாளர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் வாடகை நிர்ணயம் செய்யவும், சமுதாயக் கூடத்தை உபயோகப்படுத்துபவர்களிடம் வைப்புத் தொகையாக ரூ. 5000 பெற்று பின்னர் திரும்ப வழங்கவும், ஏற்கனவே உள்ள விதிமுறைகளின்படி சமுதாயக் கூடத்தை பயன்பாட்டிற்கு அளிக்கவும் மேலும் நாடாளுமன்ற தேர்தல் 2009 அறிவிக்கப்பட்டு தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்ததால் அவசர அவசியத்தை முன்னிட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று சமுதாயக் கூடம் வாடகைக்கு அளிக்கப்பட்டதை அங்கீகரிக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண் 2565 /2008/ டி 1 மே

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 64 நாள் 11.9.2009</u>

சமுதாயக் கூடத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தின வாடகை மற்றும் வைப்புத் தொகை அதிகமாக இருப்பதனால் ஆய்வு மேற்கொண்டு மீண்டும் மாமன்றத்திற்கு பொருள் வைத்து முடிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 8

பொருள்- வணிக வளாக கடைகள் - கோவை மாநகராட்சி - மேற்கு மண்டலம் - காலியாக உள்ள கடைகளுக்கு மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி 22.01.09-ம் தேதியன்று நடைபெற்றது. உச்சகேள்வி கோரியுள்ள ஏலதாரர்களுக்கு - கடைகள் - ஒப்படைப்பு செய்தது - தொடர்பாக.

-------------

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலத்தில் காலியாக உள்ள வணிக வளாக கடைகள் ஒப்படைத்தல் மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி 22.01.09-ம் தேதியன்று மேற்கு மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் கீழ்காணுமாறு ஏலதாரர்கள் கலந்து கொண்டு உச்சகேள்வி கேட்டுள்ளனர்.

| வ. எண் | ஏல இனம் | கடை எண் | ஏலத்தில் கலந்து கொண்ட ஏலதாரர்கள் | ஏலதாரர்கள் கோரிய கேள்வி தொகை (ஒரு மாத வாடகை) | டெண்டர் கோரிய தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | கிருஷ்ணசாமி ரோடு (வடக்கு) | 4,5,6 | ஏலம் கோர எவரும் முன் வரவில்லை | | |
| 2 | கிருஷ்ணசாமி ரோடு (தெற்கு) | 1 | திருமதி.D.ரேகா<br>திரு. K. தேவசேனாதிபதி<br>திரு. M. நாசர்<br>திரு. U. ஸ்ரீதர்<br>திரு. S. சரவணன் | ரூ.5600<br>**ரூ.9500**<br>ரூ.5800<br>ரூ9450<br>ரூ.3300 | ரூ.3557<br>--<br>ரூ4500<br>ரூ3500<br>ரூ3800 |
| | | 5 | திரு.தேவசேனாதிபதி<br>திரு.U.ஸ்ரீதர்<br>திரு.R.உமாசந்திரன்<br>திரு.மா.மகுடபதி<br>திரு.அ.ஜார்ஜ் | ரூ.6200<br>ரூ.8700<br>ரூ.4350<br>**ரூ.8750**<br>ரூ.6600 | ரூ.4455<br>ரூ3000<br>--<br>ரூ.4050<br>-- |
| | | 7 | திரு.R.உமாசந்திரன்<br>திரு.A.ஜார்ஜ்<br>திரு.S. செந்தில்<br>திரு.U.ஸ்ரீதர் | --<br>ரூ.6000<br>ரூ.5000<br>**ரூ.6050** | --<br>--<br>ரூ.4200<br> |
| 3 | சுப்ரி வீதி | 4A | ஏலம் கோர எவரும் முன் வரவில்லை | --- | --- |
| 4 | தடாகம் ரோடு | 14 | ஏலம் கோர எவரும் முன் வரவில்லை | --- | --- |
| | | 15 | திரு.N. பாலசுந்தரம் | **ரூ.2700** | --- |
| | | 16 | திரு.C.R.மணிகண்டன்<br>திரு. N. அன்பழகன் | ரூ.2650<br>**ரூ.2700** | ---<br>ரூ.1800 |
| | | 24 | திரு.M.கிருஷ்ணமூர்த்தி<br>திரு.P.பாலசுப்ரமணியன்<br>திரு. B.நடராஜ் | ரூ.2700<br>**ரூ.2750**<br>ரூ.2650 | ரூ.2150<br>ரூ.2100<br>ரூ.1700 |
| | | 26 | ஏலம் கோர எவரும் முன் வரவில்லை | --- | --- |
| 5 | தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி (வடக்கு) | 8 | திரு.C.R. வினாயகம்<br>திரு.V. ஜெகநாதன் | ---<br>**ரூ.3500** | ---<br>ரூ.3200 |

வ.எண்.2-ல் கண்ட கிருஷ்ணசாமி ரோடு கடை எண்.1 (தெற்கு) திரு. K. தேவசேனாபதி உயர்ந்தபட்ச ஏலக் கேள்வியாக ரூ.9500-க்கு கோரியுள்ளார். இத்தொகை ஏற்கனவே உள்ள கடைகளின் மாதவாடகை ரூ.3359- ஐ விட கூடுதலாக உள்ளது. எனவே இக்கடையின் உரிமத்தை திரு.K. தேவசேனாபதி என்பவருக்கு வழங்கலாம்.

வ.எண். 2-ல் கண்ட கடை எண்.5 (தெற்கு) திரு.மா.மகுடபதி உயர்ந்தபட்ச ஏலக் கேள்வியாக ரூ.8750-க்கு கோரியுள்ளார். இத்தொகை ஏற்கனவே உள்ள கடைகளின் மாத வாடகை ரூ.3359-ஐ விட கூடுதலாக உள்ளது. எனவே இக்கடையின் உரிமத்தை திரு.மா.மகுடபதி என்பவருக்கு வழங்கலாம்.

வ.எண். 2-ல் கண்ட கடை எண்.7 (தெற்கு) திரு.U.ஸ்ரீதர் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வியாக ரூ.6050-க்கு கோரியுள்ளார். இத்தொகை ஏற்கனவே உள்ள கடைகளின் மாதவாடகை ரூ.3359-ஐ விட கூடுதலாக உள்ளது. எனவே இக்கடையின் உரிமத்தை திரு.U.ஸ்ரீதர் என்பவருக்கு வழங்கலாம்.

வ.எண்.4 -ல் கண்ட தடாகம் ரோடு கடை எண்.15 திரு.N.பாலசுந்தரம் உயர்ந்த பட்ச ஏலக் கேள்வியாக ரூ.2700-க்கு கோரியுள்ளார். இத்தொகை ஏற்கனவே உள்ள கடைகளின் மாத வாடகை ரூ.2551-ஐ விட கூடுதலாக உள்ளது. ஏலம் கோர எவரும் முன்வராததால் நீண்ட நாட்களாக காலியாக உள்ளது. எனவே இக்கடையின் உரிமத்தை திரு.N.பாலசுந்தரம் என்பவருக்கு வழங்கலாம்.

வ.எண்.4-ல் கண்ட தடாகம் ரோடு கடை எண்.16 திரு.N. அன்பழகன் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வியாக ரூ.2700-க்கு கோரியுள்ளார். இத்தொகை ஏற்கனவே உள்ள கடைகளின் மாத வாடகை ரூ.2551-ஐ விட கூடுதலாக உள்ளது. ஏலம் கோர எவரும் முன் வராததால் நீண்ட நாட்களாக காலியாக உள்ளது. எனவே இக்கடையின் உரிமத்தை திரு.N. அன்பழகன் என்பவருக்கு வழங்கலாம்.

வ.எண். 4-ல் கண்ட கடை எண்.24 திரு.P.பாலசுப்ரமணியன் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வியாக ரூ.2750-க்கு கோரியுள்ளார். இத் தொகை ஏற்கனவே உள்ள கடைகளின் மாத வாடகை ரூ.2551-ஐ விட கூடுதலாக உள்ளது. ஏலம் கோர எவரும் முன் வராததால் நீண்ட நாட்களாக காலியாக உள்ளது. எனவே இக்கடையின் உரிமத்தை திரு.P.பாலசுப்ரமணியன் என்பவருக்கு வழங்கலாம்.

வ.எண்.5-ல் கண்ட தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி கடை எண் 8 (வடக்கு) திரு.V. ஜெகநாதன் என்பவர் ஒருவர் மட்டும் ஏலத்தில் கலந்து கொண்டு உயர்ந்தபட்ச ஏலக் கேள்வியாக ரூ.3500-க்கு கோரியுள்ளார். மேலும் இந்த இனத்திற்கு திரு.M.சுந்தர மூர்த்தி என்பவர் ஏல நிபந்தனையின்படி ஏலத்திற்கு முந்தைய நாள் வைப்புத்தொகையை செலுத்தாமலும் முறையாக ஏலத்தில் கலந்து கொள்ளாமலும் டெண்டர் விண்ணப்பத்தில் மாத வாடகை ரூ.3600-க்கு ஏலக் கேள்வி கேட்டுள்ளார். எனவே இவரது கோரிக்கையை நிராகரிக்கலாம். திரு.V.ஜெகநாதன் என்பவர் கோரிய ஏலக் கேள்வி தொகை ரூ.3500- ஏற்கனவே உள்ள கடைகளின் மாத வாடகை ரூ.2907-ஐ விட கூடுதலாக உள்ளது. ஏலம் கோர எவரும் முன் வராததால் நீண்ட நாட்களாக காலியாக உள்ளது. எனவே இக்கடையின் உரிமத்தை திரு.V. ஜெகநாதன் என்பவருக்கு வழங்கலாம்.

வ.எண்.1,3,4-ல் கண்ட கிருஷ்ணசாமி ரோடு கடை எண். 4,5,6 (வடக்கு) சுப்ரி வீதி கடை எண். 4A. தடாகம் ரோடு கடை எண். 14, 26 ஆகிய இனங்களுக்கு ஏலம் கோர எவரும் முன் வராததால் மறு ஏலம் கோரலாம்.

மாநகராட்சி வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.3 நாள் 20.02.09-ல் உச்ச கேள்வி கோரியுள்ள ஏலதாரர்களின் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நாடாளுமன்ற மக்களவை தொகுதி பொது தேர்தல் 2009 அறிவிக்கப்பட்டு நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்ததால் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண். 11367/09/ஆர்.3 நாள்.16.04.09-ல் தெரிவித்துள்ளவாறு உச்சகேள்வி கோரியுள்ள ஏலதாரர்களின் கேள்விகளை மாநகராட்சி குழு 20.04.09-ல் அங்கீகரிக்கப்பட்டதன் பேரில் உரிமை ஆணை ஏலதாரருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது. இதனை அனுமதிக்கவும் மற்றும் மேற்காணும் பொருள்கள் தொடர்பாகவும் மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 5024/ 2006/ அ1 மே

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 65 நாள் 11.9.2009</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 9

பொருள் - கோவை மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வார்டு எண். 51 – தடாகம் ரோடு- வாழைக்காய் மண்டியில் புதியதாக சமுதாயக்கூடம் கட்டப்பட்டது – பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்துதல் - தொடர்பாக.

--------------

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண். 51 தடாகம் ரோடு வாழைக்காய் மண்டியில் புதியதாக சமுதாயக் கூடம் 2495 ச.அடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. கட்டிடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தும் பொருட்டு கட்டிடத்திற்கு தற்போதைய வழிகாட்டி மதிப்பின்படி, தின வாடகை ரூ.2360 பொறியாளர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் வாடகை நிர்ணயம் செய்யவும், சமுதாயக் கூடத்தை உபயோகப்படுத்துபவர்களிடம் வைப்புத் தொகையாக ரூ. 5000 பெற்று பின்னர் திரும்ப வழங்கவும், ஏற்கனவே உள்ள விதிமுறைகளின்படி சமுதாயக் கூடத்தை பயன்பாட்டிற்கு அளிக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண் 10845/ 2008/ டி 1 மே

### மாநகர மன்ற தீர்மானம் எண் 66 நாள் 11.9.2009

சமுதாயக் கூடத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தின வாடகை மற்றும் வைப்புத் தொகை அதிகமாக இருப்பதனால் ஆய்வு மேற்கொண்டு மீண்டும் மாமன்றத்திற்கு பொருள் வைத்து முடிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 10

பொருள் - கல்வி – கோவை மாநகராட்சி – மாநகராட்சி ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகள் - 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 1 ஜோடி கேன்வாஷ் ஷு மற்றும் 2 ஜோடி சாக்ஸ்கள் வழங்குவது தொடர்பாக மன்றப் பொருள் ஒப்புதலுக்கு.

---------

கோவை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் 45 ஆரம்பப் பள்ளிகள் மற்றும் 12 நடுநிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 1 ஜோடி கேன்வாஷ் ஷு (Canvas shoe) மற்றும் 2 ஜோடி சாக்ஸ் (Socks) மாநகராட்சி நிதியிலிருந்து வழங்குதல் தொடர்பாக கல்விக் குழுவின் ஒப்புதலுடன் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். அரசின் அனுமதி பெற்ற பின்பு வழங்கலாம்.

ந.க.எண். 5207/09/ K6

### மாநகர மன்ற தீர்மானம் எண் 67 நாள் 11.9.2009

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் எனவும் அரசின் அனுமதி பெற்று வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 11

கடந்த 22.06.2009 மற்றும் 6.7.2009 அன்று நடைபெற்ற மாமன்ற கூட்டங்களில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் மீண்டும் மாமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

பொருள் : உரிமம் - கோயமுத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம்-புலியகுளம் மாநகராட்சி திருமண மண்டபம்- சர்வே ஆப் இந்தியா அலுவலகத்திற்கு மாதாந்திர உரிமக் கட்டணம் அடிப்படையில் ஒப்படை செய்யப்பட்டது - உரிமக்காலம் 25.07.2009 உடன் முடிவடையவுள்ளது - உரிமக் கட்டணம் உயர்வு செய்து – உரிமக் காலம் நீடித்து வழங்குவது-தொடர்பாக.

-----------

கோயமுத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட புலியகுளம் மாநகராட்சி திருமண மண்டபம் மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.20,000/- அடிப்படையில் 26.07.2006 முதல் 25.07.2009 முடிய மூன்றாண்டுகளுக்கு சர்வே ஆப் இந்தியா அலுவலகத்திற்கு ஒப்படை செய்யப்பட்டதன் உரிமக் காலம் 25.07.2009 உடன் முடிவடைய உள்ளது.

சர்வே ஆப் இந்தியா அலுவலக இயக்குநர் தமது கடித எண்.187/(13ஏ) நாள் 27.02.2009-ன் மூலம் ஏல ஒப்பந்தத்தின்படி மேலும் மூன்றாண்டுகளுக்கு அலுவலகம் செயல்பட உரிமம் புதுப்பித்து வழங்குமாறு தெரிவித்துள்ளார்.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுதல் மற்றும் குத்தகைக்கு புதுப்பித்தல் குறித்து அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள் 3.7.2007-ல் திருத்திய நடைமுறைகள் ஆணைகள் வெளியிட்டுள்ளது. பாரா எண்.4-ல், II-ல், நகராட்சி கடைகள் ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடப்படலாம். மூன்றாண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு காலஅளவு முடிவடைவதின் பேரில், அக்குத்தகை தன்னியல்பாகவே புதுப்பிக்கப்படும். இவ்வாறாக 9 ஆண்டுகள் வரையில் புதுப்பிக்கப்படும். மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை குத்தகைத் தொகை 15 சதவீதம் உயர்த்தப்படும். (நிபந்தனை தற்போது குத்தகையை அனுபவித்து வரும் குத்தகைதாரர்களுக்கும் பொருந்தும்)

மேலும் பாரா எண்.4-ல், IV-ல் குத்தகைதாரர்கள் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க 1000 சதுரடிக்கு மேல் ரூ. 2000 கட்டணம் செலுத்த வேண்டும்.

அதன்படி புலியகுளம் மாநகராட்சி திருமண மண்டபத்தில் செயல்பட்டு வரும் சர்வே ஆப் இந்தியா அலுவலகம் மத்திய அரசு அலுவலகமாதலால், அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள் 3.7.2007-ல் தெரிவித்துள்ளபடி, தற்போது செலுத்தப்பட்டு வரும் மாதாந்திர உரிமக் கட்டணத் தொகை ரூ.20,000/- ஐ 15 சதவீதம் உயர்வு செய்து, மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.23,000/- ஆக நிர்ணயம் செய்து 26.07.2009 முதல் 25.07.2012 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு உரிம நீட்டிப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

கூடுதல் அலுவலகக் குறிப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட புலியகுளம் மாநகராட்சி திருமண மண்பபம், சர்வே ஆப் இந்தியா அலுவலகத்திற்கு மாதாந்திர உரிமக் கட்டணம் அடிப்படையில் ஒப்படை செய்யப்பட்ட உரிமக் காலம் 25.07.2009 உடன் முடிவடைவதால் ஆணையாளர் அவர்களின் அனுமதியுடன் உரிமக் கட்டணம் 15% உயர்வு செய்தும் மூன்று மாத காலம் நீடிப்பு செய்தும் வழங்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது செலுத்தப்பட்டு வரும் மாதாந்திர உரிமக் கட்டணத் தொகை ரூ. 20,000/- ஐ 15% சதவீதம் உயர்வு செய்து மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ. 23,000/- ஆக நிர்ணயம் செய்து 26.07.2009 முதல் 25.07.2012 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு உரிம நீட்டிப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

கூடுதல் அலுவலகக்குறிப்பு - அனுமதி வழங்கலாம். ந.க.எண்.8146/ 2009/ கிஎ7

### மாநகர மன்ற தீர்மானம் எண் 68 நாள் 11.9.2009

26.07.09 முதல் 31.03.10 வரை 15% உயர்வு செய்யப்பட்ட மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ. 23,000/- அடிப்படையில் உரிம நீட்டிப்பு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 12

<u>கடந்த 22.06.2009 மற்றும் 6.7.2009 அன்று நடைபெற்ற மாமன்ற கூட்டங்களில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் மீண்டும் மாமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

கோயம்புத்தூர் மாநகரில் பேருந்துகள் செல்லும் சாலைகளின் பல பகுதிகளில், பயணிகள் நிழற்குடைகள் அமைக்க, பல தனியார் நிறுவனங்களுக்கு மாநகராட்சியால் அனுமதி வழங்கப்பட்டதில் பல நிறுவனங்கள் பேருந்து நிழற்குடைகள் அமைத்துள்ளனர். கடந்த வருடம் அனுமதியற்ற விளம்பரங்களை அகற்றியதாலும் மற்றும் விளம்பரங்கள் செய்வது குறித்து அனுமதி வழங்கப்படாததாலும் பல நிறுவனங்கள் பயணிகள் நிழற்குடைகள் பராமரிக்கும் பணியினை நிறுத்திவிட்டனர்.

தற்பொழுது, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தனது ந.க.எண். 20954/08/இ3 நாள் 10.03.2009-ம் தேதிய செயல்முறை ஆணையில் கடந்த 09.09.2008 ம் தேதியில் நடைபெற்ற சாலை பாதுகாப்பு குழு கூட்டத்தில் கோயம்புத்தூர் மாநகர காவல் ஆணையர் அவர்கள், மாநகரப் பகுதிகளில் ஒளிரும் பேருந்து நிழற்குடைகள் அமைக்கப்பட வேண்டும் எனவும் மேலும் இப்பணியினை தனியார் நிறுவனங்கள் மூலம் செய்யலாம் எனவும் பரிந்துரை செய்துள்ளதை சாலை பாதுகாப்புக்குழு ஏற்றுக் கொண்டுள்ளது.

அதனடிப்படையில், கோவை மாநகரில் பயணிகள் நிழற்குடை இல்லாத இடங்களில் ஒப்பந்தப்புள்ளி அல்லது EOI (Expression of Interest) மூலம் நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பயணிகள் நிழற்குடை அமைக்க அனுமதி வழங்க மேல் நடவடிக்கை எடுக்கலாம்.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம். ந.க.எண். 5541/09/எம்.எச். 5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 69 நாள் 11.9.2009</u>

மாநகரில் உள்ள அனைத்து பயணிகள் நிழற்குடை குறித்த முழு விபரங்களுடன் மாமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விவாதித்து மீண்டும் பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 13

கோயம்புத்தூர் மாநகராட்சி, எல்லைத்தோட்டம் சாலைக்கும், அவினாசி சாலைக்கும் இணைப்புச் சாலையாக ரங்கவிலாஸ் நகர் சாலையை 50 ஆண்டுகளுக்கும் மேலாக பொது மக்கள் உபயோகப்படுத்தி வருகிறார்கள். இச்சாலையை அடைக்க சர்தார் வல்லபாய் பட்டேல் டெக்ஸ்டைல்ஸ் காலேஜ் நிறுவனத்தினர் தடையை ஏற்படுத்தி உள்ளனர். இதனை பொது மக்கள் பலமுறை ஆட்சேபனை செய்து தடையை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளனர். இச்சாலையை மாநகராட்சி மூலமாக நிரந்தரமாக அமைத்து தரவேண்டும் என தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீ ரங்கவிலாஸ் மில் (NTC Mill) எதிர்புறம் வடக்கு நோக்கி செல்லும், மில்லுக்கு சொந்தமான பட்டா பூமி வழியாக மேற்படி பூமிகளுக்குள் வடக்கு பகுதியில் சௌரிபாளையம் மற்றும் விளாங்குறிச்சி கிராமத்தில் குடியிருக்கும் பொது மக்கள் கடந்த 50 ஆண்டுகளாக மேற்படி பாதையை உபயோகித்து வருகிறார்கள்.

எல்லைத் தோட்டத்தில் இருந்து க.ச.எண்.484 விளாங்குறிச்சி கிராமம் மேற்கு பகுதியில் சுமார் 134’0” X 30’0” கொண்ட இடத்தை பொது மக்கள் பயன்படுத்துவதற்காக கோவை மாநகராட்சி சாலை அமைத்து கொடுப்பதற்கு ஆட்சேபனையில்லை என தெரிவித்து ஆர்.சகுந்தலா, நில உரிமையாளர் ஆட்சேபனையின்மை கடிதம் கொடுத்துள்ளார். க..ச.எண்.484 விளாங்குறிச்சி கிராமம் பகுதியில் சுமார் 200’0” X 30’0” கொண்ட இடத்தை கோவை மாநகராட்சியால் சாலை அமைத்துக் கொடுப்பதற்கு ஆட்சேபணையில்லை என தெரிவித்து வி.வெங்கடேசன், நில உரிமையாளர் ஆட்சேபனையின்மை கடிதம் கொடுத்துள்ளார்.

S.F.No.471/1 பாகம் சௌரிபாளையம் கிராமம் இடத்தில் சுமார் 510’0” X 30’0” அகலத்தில் NTC மில் நிறுவனத்திடமும், S.F.No.471/1 பாகம் சௌரிபாளையம் கிராமம் இடத்தில் சுமார் 510’0” X 30’0” அகலத்தில் அவினாசி சாலை வரை சர்தார் வல்லபாய் பட்டேல் டெக்ஸ்டைல் காலேஜ் (மினிஸ்ட்ரி ஆப் டெக்ஸ்டைல்ஸ்)-க்கு சொந்தமான இடத்திலும் சாலை அமைத்தால், எல்லைத் தோட்டம் சாலையில் இருந்து அவினாசி சாலையை அடையலாம். எனவே NTC மில் நிறுவனத்திடம் இருந்தும், சர்தார் வல்லபாய் டெக்ஸ்டைல்ஸ் காலேஜ் நிறுவனத்திடமும், பேச்சு வார்த்தை மூலமாக நிலத்தைப் பெற்று சாலை அமைக்கலாம்.

இது சம்பந்தமாக நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவில் தீர்மானம் எண்.71, நாள் 27.01.2009 – ன்படி எல்லைத் தோட்டம் சாலை முதல் அவினாசி சாலை வரை புதிய இணைப்புச் சாலை அமைக்க துணை மேயர், வடக்கு மண்டலத் தலைவர், 2-வது வட்டார மாமன்ற உறுப்பினர் மற்றும் அப்பகுதி பொது மக்கள் வேண்டுகோளுக்கு இணங்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டு மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில், மாநகர மன்றத் தீர்மான எண்.360, நாள்.19-02-2009 -ல் NTC மில் நிறுவனத்திடமிருந்தும், சர்தார் வல்லபாய் பட்டேல் டெக்ஸ்டைல்ஸ் கல்லூரி நிறுவனத்திடமிருந்தும் நிலத்தை பேச்சு வார்த்தை மூலம் தானமாகப் பெற்று எல்லைத் தோட்டம் சாலையில் இருந்து அவிநாசி சாலையை இணைக்கும் இணைப்புச் சாலை அமைக்க தீர்மானிக்கப்பட்டது.

இதன்பேரில் NTC நிறுவனத்திற்கு 20.2.2009-ல் கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி NTC நிறுவனத்தினர், கடித எண் SECTL/SRV LINK ROAD/0709 நாள் 21.07.2009-ல் புதிய இணைப்புச் சாலை அமைக்க வழங்கும் நிலத்திற்கு ஈட்டுறுதி வழங்கும் பட்சத்தில் நியு டெல்லியில் உள்ள தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு நிலம் வழங்க பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பொது மக்கள் தற்போது உபயோகித்து வரும் NTC நிறுவனத்திற்கு சொந்தமான 15’0’’ அகல சாலைகளை சேர்த்து 30 அடி அகல புதிய இணைப்பு சாலை அமைக்க வழங்கும் இடத்திற்கு ஈட்டுறுதி (Compensation) வழங்குவது குறித்து மாநகர மன்றத்தின் முடிவுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மாமன்றம் முடிவு செய்யலாம். ந.க.எண். 16927/2008/எச் 2 (வ)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 70 நாள் 11.9.2009</u>

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைத் தோட்டச் சாலையில் இருந்து அவினாசி சாலையை இணைக்கும் இணைப்புச் சாலை அமைக்க தேவைப்படும் இடத்திற்கு ஈட்டுத் தொகை வழங்கி இடத்தை கையகப்படுத்தி சாலை அமைக்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 14

பொருள்- நகர்புற அபிவிருத்தி - பலமாடி கட்டிட பகுதி பிரகடனம் கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட 60 அடி அகல சாலைகளை ஒட்டிய பகுதிகளை பலமாடி கட்டிட பகுதிகளாக அறிவிப்பு செய்தல் - நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகத்திற்கு விபரம் தெரிவித்தல்- தொடர்பாக.

பார்வை -1. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு அனுப்பியுள்ள நேர்முக கடிதம். ந.க. எண். 17067/ 09/ பி.ஏ2 நாள். 28.8.2009.

2. கோயம்புத்தூர் ப்ராபர்டி டெவலப்பர்ஸ் அசோசியேஷன் அவர்கள், தலைமை செயலர், தமிழ்நாடு அரசு அவர்களுக்கு அனுப்பிய கடிதம்

---------

பார்வை 1- ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது நேர்முக கடிதத்தில், கோயம்புத்தூர் ப்ராபர்ட்டி டெவலப்பர்ஸ் அசோசியேஷன் சார்பில் தமிழக அரசின் தலைமைச் செயலர் அவர்களுக்கு சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தில் “18 மீட்டர் அகலமுள்ள சாலையினை ஒட்டிய பகுதிகள் அனைத்தும் பலமாடி கட்டிடப் பகுதிகளாக வரையறை செய்ய வேண்டும்’’ என்ற கோரிக்கை தொடர்பாக 18 மீட்டர் அகல சாலைகளை ஒட்டிய பகுதிகளை பலமாடிக் கட்டிட பகுதிகளாக பிரகடனப்படுத்த வேண்டியிருப்பதால் மாநகராட்சி சார்பில், மாமன்ற தீர்மான ஒப்புதலுடன் 60’ அடி சாலைகள் அடங்கிய பட்டியலுடன் உத்தேசங்களை அனுப்பி வைக்கும்படி ஆணையர் கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார் .

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட 60’ அகல சாலைகளை ஒட்டிய பகுதிகளையும் அதனை அணுகு சாலையாகக் கொண்ட மனைகளையும் பலமாடி கட்டிடம் கட்டும் பகுதிகளாக பிரகடனம் செய்யலாம்.

## மேற்கு மண்டலம்

1. மேட்டுப்பாளையம் சாலை
2. தடாகம் ரோடு
3. D.B. ரோடு
4. திருவேங்கடசாமி ரோடு
5. சொக்கம்புதூர் ரோடு
6. A.K.S. நகர் 60’ அடி ரோடு
7. பேரூர் ரோடு
8. தெலுங்குபாளையம் ரோடு
9. ராபட்சன் ரோடு
10. கேப்டன் பழனிசாமி ரோடு
11. சிவானந்த காலனி பைபாஸ் ரோடு
12. கிருஷ்ணசாமி ரோடு
13. பாரதிபார்க் ரோடு
14. வேடப்பட்டி ரோடு
15. ராமமூர்த்தி ரோடு
16. அருள் கார்டன் ஸ்கீம் ரோடு
17. டவர்லைன் ரோடு செல்வபுரம்
18. ராமகிருஷ்ணாபுரம் ரோடு
19. கோபால் லே அவுட் ரோடு

## கிழக்கு மண்டலம்

1. திருச்சி சாலை
2. காமராஜர் சாலை (E.S.I. ரோடு)
3. மசக்காளிபாளையம் ரோடு
4. 80’ அடி திட்டசாலை ராமநாதபுரம்
5. ரேஸ்கோர்ஸ் சாலை
6. காமராஜர் ரோடு ரேஸ்கோர்ஸ் (நிர்மலா கல்லூரி சாலை)
7. பெரியார் நகர் 60’ அடி சாலை
8. லட்சுமி மில்ஸ் ரோடு (அவினாசி சாலை முதல் திருச்சி சாலை வரை)
9. அவினாசி ரோடு
10. ஜெயசிம்மபுரம் ரோடு
11. நியூசிற்றம்பலம் ரோடு
12. பொன்னிநகர் ரோடு
13. B.R.புரம் ரோடு
14. பெர்க்ஸ் பள்ளி சாலை
15. பால சுந்தரம் சாலை
16. ஸ்கீம் ரோடு ( வடக்கு மண்டலம் முதல் அவினாசி சாலை வரை)

## வடக்கு மண்டலம்

1. 100 அடி ரோடு (ராஜேந்திர பிரசாத் சாலை)
2. கிராஸ்கட் ரோடு (காந்திபுரம் சிக்னல் முதல் மேம்பாலம் வரை)
3. 105 அடி ரோடு (ராஜீ ரோடு)
4. சத்தி ரோடு (காந்திபுரம் சிக்னல் முதல் மாநகராட்சி எல்லை சரவணம்பட்டி வரை)
5. பாரதியார் ரோடு (பெண்கள் பாலிடெக்னிக் முதல் காந்திபுரம் சிக்னல் வரை)
6. ஆவாரம்பாளையம் ரோடு (வி.கே.கே மேனன் ரோடு சந்திப்பு முதல் வடக்கு சத்தி சாலை வரை)
7. சின்னசாமி ரோடு (சத்தி சாலை முதல் கிழக்கே சாலை முடிவு வரை)
8. FCI ரோடு
9. அழகப்ப செட்டியார் ரோடு (பவர்ஹவுஸ் முதல் 7ம் வீதி விஸ்தரிப்பு பாலம் வரை)
10. தண்ணீர் பந்தல் ரோடு (விளாங்குறிச்சி சாலை) அவினாசி சாலை முதல் மாநகராட்சி எல்லை வரை)
11. விளாங்குறிச்சி சாலை (பீளமேடு ரயில் கிராஸிங் முதல் “S” பெண்டு வரை)
12. வி.கே.கே மேனன் சாலை (பாரதியார் ரோடு TTC முதல் ஆவாரம்பாளையம் சாலை வரை)

## தெற்கு மண்டலம்

1. Dr. நஞ்சப்பாரோடு
2. அவினாசி சாலை (மேம்பாலம் முதல் அண்ணாசிலை வரை)
3. ஸ்டேட் பேங்க் ரோடு
4. ஒசூர் ரோடு
5. திருச்சி ரோடு (ஸ்டேட் பாங்க் சாலை முதல்)
6. K.G.தியேட்டர் ரோடு
7. ஆர்ட்ஸ் காலேஜ் ரோடு
8. LIC ரோடு (அவினாசி சாலை முதல் நஞ்சப்பா ரோடு வரை)
9. உக்கடம் புற வழிச்சாலை( உக்கடம் to சுங்கம்)
10. உக்கடம் புற வழிச்சாலை மேற்கு (சுண்டக்காமுத்தூர் சாலை, உக்கடம் to பேரூர் ரோடு)
11. பேரூர் சாலை (நாடார் வீதி முதல் எல்லை வரை)
12. பெரிய கடை வீதி (லங்கர்கானாபாலம் முதல் மணிக்கூண்டு வரை)
13. இடையர் வீதி (ரங்கே கவுண்டர் சாலை சந்திப்பு வரை)
14. நஞ்சுண்டாபுரம் ரோடு
15. ப்ரூக் பாண்ட் சாலை
16. ராஜ வீதி ( ரங்கே வீதி முதல் கருப்பகவுண்டர் வீதி சந்திப்பு)
17. பொள்ளாச்சி சாலை ( உக்கடம் முதல் ஆத்துப்பாலம் வரை)

மேலும் அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்பு திட்டங்கள், விரிவு அபிவிருத்தி திட்டங்களில் கண்டுள்ள 60' அடி அகலம் மற்றும் அதற்கு மேற்பட்ட அகலம் உள்ள திட்டச் சாலைகள் அணுகு சாலையாக கொண்டு ஒட்டியுள்ள பகுதிகள் மற்றும் மேற்காண் பட்டியலில் கண்டுள்ள 60 அடி அகல சாலைகளை ஒட்டிய பகுதிகளை பலமாடி கட்டிடம் கட்டும் பகுதிகளாக பிரகடனம் செய்ய ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அங்கீகரிக்கலாம் ந.க.எண். 9272/2009/எம்.எச்5.

**மாநகர மன்ற தீர்மானம் எண் 71 நாள் 11.9.2009**

மாநகரில் உள்ள அனைத்து 60' சாலைகள் குறித்து அனைத்து மாமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாய்வு செய்து நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் ஒப்புதலுடன் மீண்டும் மாமன்றத்திற்குப் பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 15**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட தெற்கு மண்டலம் உக்கடம் பகுதியில் கோயம்புத்தூர் கிராமம் நகரளவு எண்கள் 57, 58/1, 58/2, 59/1, 59/3, 60/1, 60/3, 93, 95, 96/1, 96/2, 97/1, 97/2, 98/2, 99, 100/1, 100/2, 100/3, 101, 102/1, 102/2, 103/1, 104, 105,106,107,108,109,110,111,120,121,122, 123, 124, 125,126,127, 128, 129/2, 130/2, 131/2, 132/2, 133, 134/2, 135, 136, 137, 138, 139/1, 139/2, 140/2, 141/1, 141/2, 142, 143, 144, 145, 146/2, 146/3, 147/2, 148/1,149, 150,1 51, 152, 153/1, 154, 158,159, 160, 168, 169/1-ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற வளர்ச்சி மற்றும் BSUP திட்டத்தின் கீழ் தரை மற்றும் 3 தளங்கள் கொண்ட 143 பிளாக்குகள் மற்றும் தரை மற்றும் 5 தளங்கள் கொண்ட 38 பிளாக்குகள் ஆக 9600 குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 80.66 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதில் 46.50 ஏக்கர் நிலம் கோயம்புத்துார் மாநகராட்சி மாமன்றத் தீர்மான எண். 215 நாள் 21.01.2008-ன் - மூலமும் மற்றும் இத்துடன் 12 ஏக்கர் நிலம் மாமன்ற தீர்மான எண். 83 நாள். 28.5.08 மூலம் குடியிருப்பு நிலம் உபயோகமாக மாற்றம் செய்ய பரிந்துரை செய்யப்பட்டு அரசு ஆணை (2D) எண்.1143 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ( ந.வ.4-1 ) நாள் 19.9.08-ன் மூலம் 58.50 ஏக்கர் நிலம் விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு நில உபயோகமாக நில உபயோக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு மொத்தமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 80.66 ஏக்கர் நிலம் தேவைப்படுவதால் நிலப் பயன் மாற்றம் ஏற்கெனவே செய்யப்பட்ட 58.50 ஏக்கர் நிலம் போக தற்போது மீதமுள்ள 22.16 ஏக்கர் நிலம் விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு நில உபயோகமாக மாற்றம் செய்யவும், பல மாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யவும், நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தனது தீர்மான எண்.76 நாள் 3.09.2009-ன் மூலம் ஏற்கெனவே 58.50 ஏக்கர் நிலம் குடியிருப்பு பகுதியாக நில உபயோக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அது போல் தற்சமயம் கூடுதலாக தேவைப்படும் 22.16 ஏக்கர் நிலத்தை BSUP திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் 8025/09/எச்1/தெ.

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 72 நாள் 11.9.2009</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்துார் மாநகராட்சி

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்துார் மாநகராட்சி